**செய்தி வெளியீடு எண்: 1/2017** **நாள்:03.01.2017**

**தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட நகர்ப்புரப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்து சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் இன்று (3.1.2017) விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள், தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் விநியோகப் பணிகள் குறித்தும் உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களிடம் நேரில் கேட்டறிந்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். மேலும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் பேரூராட்சிகள் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொது மக்கள் அனைவரும் குடிநீரை வீணாக்காமல் சிக்கனமான முறையில் பயன்படுத்த வேண்டும் என அறிவுரை வழங்கினார்.

தமிழகத்தில் தென் மேற்குப் பருவமழை மற்றும் வட கிழக்கு பருவமழை பொய்த்துள்ள நிலையில், பொது மக்களுக்கு தங்கு தடையின்றி சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுக்கு பின்வருமாறு அறிவுரைகளை வழங்கினார்.

- அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் அனைத்து மக்களுக்கும் குடிநீர் தங்கு தடையின்றி வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் போர்க்கால அடிப்படையில் எடுக்க வேண்டும்

- மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்துத் தலைமை நீர்த்தேக்க மையங்கள், தலைமை நீர் உந்து மையங்கள், நீரேற்று மையங்களை நல்ல முறையில் பராமரிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்,

- குடிநீர் விநியோகக் குழாய்களில் அடைப்புகள் இருப்பின் அவற்றை சரி செய்து சீரான குடிநீர் விநியோகம் செய்வதை உறுதி செய்ய வேண்டும். மேலும் குழாய்களின் வால்வுகள் நல்ல நிலையில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்

- 15 ஆண்டுகளுக்கு மேல் தொடர் பயன்பாட்டில் உள்ள மின் மோட்டார்களை ஆய்வு செய்து, தேவைப்படின் அவற்றை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்

- இருப்பில் உள்ள அனைத்து ஜெனரேட்டர்களும் இயங்கும் நிலையில் உள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும். தேவை ஏற்படின், புதிய ஜெனரேட்டர்களை உரிய அனுமதி பெற்று வாங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

- புதிய ஜெனரேட்டர்கள் வாங்க இயலாத பகுதிகளில், தனியார் ஜெனரேட்டர்களை வாடகைக்கு எடுத்து குடிநீர்ப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- பொது மக்களுக்கு தேவைக்கேற்ப குளோரின் கலந்த பாதுகாப்பான குடிநீரை அன்றாடம் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ஆழ்துளைக் கிணறுகள் அனைத்திலும் தரமான நீர் ஆதாரம் உள்ளதை உறுதிப்படுத்தி பயன்படுத்தும் நிலையில் தயாராக வைக்க வேண்டும்,

- தரமான குடிநீரை குடிநீர் உபயோகத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அதனை பூங்கா, செடிகொடிகள், மரங்கள் போன்றவற்றிற்கு பயன்படுத்தி குடிநீரை வீணாக்கக் கூடாது.

- பொதுக்குழாய்களில் தண்ணீர் வீணாகாமல் தடுக்க உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். பொதுக்குழாய்கள் நல்ல நிலையில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

- ஒரு சில வீடுகளில் மின்மோட்டார்களை வைத்து தண்ணீரை உறிஞ்சி, மற்ற பகுதிகளுக்கு குடிநீர் செல்வதைத் தடுப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- நீர் ஆதாரங்களில் நீர் மட்டம் குறைந்தால், தனியார் கிணறுகளையும், சமுதாயக் கிணறுகளையும் தூர்வாரி குடிநீரின் தரத்தை பரிசோதனை செய்து, பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்பதை உறுதி செய்து, பொது மக்களுக்கு வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பிளீச்சிங் பவுடர், ஆலம் போன்றவைகள் போதமான அளவில் இருப்பில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்

- ஆணையர்கள், மாநகராட்சி பொறியாளர்கள், நகராட்சி பொறியாளர்கள் ஆகியோர் தங்கள் பகுதிகளில்வ வார்டுகளுக்கு ஒரு பொறுப்பான அலுவலரை நியமனம் செய்தும் அன்றாடம் குடிநீர் வழங்கல் பணிகளை காலை 6 மணி முதல் நேரில் ஆய்வு செய்தும் மாலையில் அனைத்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டும் ஆணையர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

- குழாய் மூலம் குடிநீர் செல்லாத பகுதிகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- கணனி மூலமும், தொலைபேசி மூலமும் புகார்கள் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குடிநீர் பற்றிய புகார்கள் பெற ஒவ்வொரு வார்டிலும் புகார் பெட்டி வைக்கப்பட வேண்டும். புகார்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும்

- கூட்டுக் குடிநீர் திட்டமாக இருப்பின் தமிழ்நாடு குடிநீர் வாரிய அலுவலர்களுடன் இணைந்து சீரான முறையில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

❖ பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள், வாரம் ஒரு முறை அனைத்து செயல் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி செயற்பொறியாளர்களுடன் இணைந்து ஆய்வு கூட்டம் நடத்தி பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் சீரான முறையில் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

<u>**சென்னை மாநகரம்**</u>

❖ பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான முறையில் குடிநீர் வழங்கிட திட்டம் வகுத்து செயல்பட வேண்டும்.

❖ தனியார் விவசாய நிலங்களில் இருந்து தண்ணீர் எடுத்து விநியோகம் செய்திட தனியார் கிணற்றுத் தளங்களை கண்டறியும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும்.

❖ ஏரியோர நீர் நிலைகளுக்கு அருகில் பெரிய குழாய்களை இறக்கி, அதிக சக்திவாய்ந்த மின் மோட்டார்களைப் பொருத்தி நீரை எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் 100 விழுக்காடு பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இத்திட்டத்தில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும்.

❖ அடைப்பு உள்ள குழாய்களை மாற்றி அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்). அடைப்புகள் நீக்குவதில் காலதாமதம் ஏற்படும் இடங்களில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

❖ பயன்பாட்டில் இல்லாத பொதுக் கிணறுகளை சுத்தம் செய்து, குடிநீர் குடிப்பதற்கு தகுதியானது என்பதற்கு உரிய சான்று பெற்று, குடிநீருக்குப் பயன்படுத்த வேண்டும்

❖ பகுதிப் பொறியாளர்கள், துணைப் பகுதி பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் ஆகியோர் குடிநீர் விநியோக நேரங்களில் காலை 6 மணி முதல் அன்றாடம் களத்தில் சென்று நேர் ஆய்வு செய்து குடிநீர் சீராக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

❖ குழாய் மூலம் குடிநீர் வழங்க இயலாத பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

❖ முக்கியமாக குடிசைப் பகுதிகளிலும், ஏழை மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளிலும் அதிக கவனம் செலுத்தி சீரான முறையில் குடிநீர் வழங்க வேண்டும்.

- குடிநீர் வழங்கும் லாரிகளின் எண்ணிக்கை / நடைகளை தேவைக்கேற்ப உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- குடிநீர் லாரிகள் செல்ல இயலாத சிறு தெருக்கள் மற்றும் சந்துகளில் 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- தேவைப்படும் அனைத்து இடங்களிலும் குடிநீர்த் தொட்டிகளை வைத்து அன்றாடம் குடிநீர் வழங்கப்பட வேண்டும்

- இரு குடிநீர்த் தொட்டிகள் வைத்து சிறிய திறந்த வாடகை லாரிகள் மூலம் குறுகிய தெருக்களில் குடிநீர் வழங்கப்பட வேண்டும்.

- தெருக்களில் நேரடியாக லாரிகளின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் போது ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க கூடுதலாக குடிநீர் தொட்டிகளை நிறுவ வேண்டும்.

- தேவையான இடங்களில் குடிநீர்ப் பம்புகளை புனரமைத்தும் மற்றும் புதிய பம்புகளை நிறுவவும் வேண்டும்.

- மாநகராட்சி சாலைகளில் ஏற்படும் குடிநீர் குழாய் பழுதுகளை சரி செய்ய சென்னை குடிநீர் வாரியத்திற்கு சாலைகளை வெட்டுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி உரிய அனுமதியை உடனடியாக வழங்க வேண்டும். பணிகள் முடிவடைந்தவுடன் அச்சாலைகளை சீரமைக்க உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

- கணனி மூலம் பெறப்படும் புகார்களை உடனுக்குடன் பகுதிப் பொறியாளர்கள் கணினிக்கு அனுப்பப்பட்டு அன்றைய தினமே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

- குடிநீர் பிரச்சனைகள் ஏற்படின், அப்பகுதிக்கு செயற் பொறியாளர் நேரில் ஆய்வு செய்து அவற்றிற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும்.

- நீராதாரம் முற்றிலும் குறையும் பகுதிகளில் தலைமை பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர்கள் நேரில் ஆய்வு செய்து மாற்று ஏற்பாடுகளை செய்து, குடிநீர் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்வு காண வேண்டும்.

- பொது மக்கள் குடிநீரை மிகவும் சிக்கனமான முறையில் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்த ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார்,இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் முனைவர் டி.கார்த்திகேயன்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ்,இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம்,இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய்,இஆப., பெருநகர சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், அனைத்து மாநகராட்சிகளின் ஆணையர்கள் மற்றும் மாநகரப் பொறியாளர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய பொறியியல் இயக்குநர் மற்றும் பகுதி பொறியாளர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர்கள், அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் மற்றும் செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




இன்று (03.01.2017) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய கூட்ட அரங்கத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகம் குறித்தும், அப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் விநியோகப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி,இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.தீரஜ்குமார்,இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் முனைவர் டி.கார்த்திகேயன்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ்,இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.க.மகரபூஷணம்,இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய்,இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்